# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 28–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**I.A. No. 09 of 2025 in O.S. No. 33 of 2021**
**(CNR No. TNSA13-000049-2021)**

1. மாவட்ட ஆட்சியர், சேலம்
2. சார் பதிவாளர், கெங்கவல்லி .. மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள்

எதிராக

1. செல்லப்பிள்ளை
2. இந்திரா
3. ராணி .. எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. K. சந்திரசேகரன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. தியாகராஜன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

*.. 2 ...*

**<u>உத்தரவுரை</u>**

வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிவேண்டி மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** எதிர்மனுதாரர்கள் / வாதிகள் இவ்வழக்கை மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.11 கிரய பத்திரத்திலுள்ள கிரயம் செய்தவர்களையோ, கிரயம் பெற்றவர்களையோ இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு கேள்விக்கு எதிர்மனுதாரர் / 1–ம் வாதி ஒப்புக்கொண்டார் என்றும், கடந்த 17.08.1983 அன்று கெங்கவல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1167/1983–ல் கண்டுள்ள நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று எழுத்துமூலமாக தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் பதிலுரையின் அடிப்படையில் வாதிகள் மேற்படி கிரயப்பத்திரத்திலுள்ள நபர்களை 3 முதல் 11 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதாகவும், மனுதாரர்கள் தரப்பில் கடந்த 06.03.2023 அன்று தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர்.

*.. 3 ...*

3. **<u>1–ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, மற்ற எதிர்மனுதாரர்கள் / வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் / வாதிகள் மறுத்துள்ளனர். மேலும், அசல் வழக்கில் 1–ம் எதிர்மனுதாரர் / வாதி வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பின்னிட்டு கடந்த 06.03.2023 அன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டதாகவும், இந்நிலையில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் 3 முதல் 11 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டு ஒரு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ததாகவும், அதுகுறித்து எதிர்மனுதாரர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டது என்றும், இவ்வழக்கின் விசாரணை முடியக்கூடாதென்ற கெட்ட உள்நோக்கத்தில் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தங்களுடைய மனுவில், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு

.. 4 ...

எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும், கடந்த 17.08.1983 அன்று கெங்கவல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண.எண்.1167/1983–ல் கண்டுள்ள நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று எழுத்துமூலமாக தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் பதிலுரையின் அடிப்படையில் வாதிகள் மேற்படி கிரயப்பத்திரத்திலுள்ள நபர்களை 3 முதல் 11 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதாகவும், மனுதாரர்கள் தரப்பில் கடந்த 06.03.2023 அன்று தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர். மாறாக எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய எதிருரையில், அசல் வழக்கில் 1–ம் எதிர்மனுதாரர் / வாதி வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பின்னிட்டு கடந்த 06.03.2023 அன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டதாகவும், இந்நிலையில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் 3 முதல் 11 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டு ஒரு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ததாகவும், அதுகுறித்து எதிர்மனுதாரர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டது என்றும், இவ்வழக்கின் விசாரணை முடியக்கூடாதென்ற கெட்ட உள்நோக்கத்தில் மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கை வாதிகள் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு

.. 5 ...

எதிராக தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தங்களுடைய மனுவில், மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 06.03.2023 அன்று தாக்கல் செய்த கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ததாகவும், மேற்படி கூடுதல் பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய செய்யவேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர். எனவே வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மனுதாரர்களுக்கு மீண்டும் வாய்ப்பளிப்பது அவசியம் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதால் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

7. இறுதியாக, மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 28–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.10.28 18:36:29 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

*.. 6 ...*

<u>மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.10.28 18:36:38 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 09/2025**

**---------------**

**அ.வ. எண்.33/2021**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 28.10.2025